மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.13/2023</u>

2026ம் ஆண்டு ஜனவரி 21ம் நாள் புதன்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆறுமுகம் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>21.01.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது பாட்டனார் பெயர் வையாபுரி கவுண்டர் என்றால் சரிதான். வையாபுரி கவுண்டருக்கு சுப்பையா கவுண்டர் என்கிற சுப்பராய கவுண்டர். சின்னப் கவுண்டர் என்கிற சின்னா கவுண்டர் ஆகியவர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். சுப்பையா கவுண்டர் என்கிற சுப்பராய கவுண்டர் என்பவருக்கு நாச்சிமுத்து கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியவர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். பழனிச்சாமி கவுண்டருக்கு எனது தகப்பனார் வையாபுரி கவுண்டர் மற்றும் 4ம் வாதியின் தகப்பனார் பெரியசாமி கவுண்டர். 5, 6 வாதிகளின் தகப்பனார் பொன்னுசாமி கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் என்று நான் சொல்லி உள்ளதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2.  எனது தகப்பனார் வையாபுரி கவுண்டருக்கு 1 முதல் 3 வாதிகள் ஆகிய நாங்கள்தான் வாரிசுகள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெரியசாமி கவுண்டரின் வாரிசு தான் 4 ஆம் வாதி என்பதற்கு ஆவணம் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. பொன்னுசாமி கவுண்டருக்கு 5, 6 வாதிகள் வாரிசுகள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளோமா என்றால் இல்லை. நாச்சிமுத்து கவுண்டர் மகன் தான் 7ம் வாதி பழனிச்சாமி என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளோமா என்றால் இல்லை. பெரியசாமி கவுண்டர் தாவா சொத்தை பொறுத்து 4ம் வாதி பெயரில் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளார் என்று நாங்கள் சொல்லியுள்ளதை பொறுத்து ஆவணம் தாக்கல் செய்து உள்ளோமா என்றால் இல்லை.

3. 4ம் வாதியின் தகப்பனாரான பெரியசாமி கவுண்டர் நாளது தேதியில் உயிருடன் தான் உள்ளார் என்றால் ஆமாம். பொன்னுசாமி கவுண்டர் என்பவர் நாளது தேதியில் உயிருடன் தான் உள்ளார் என்றால் ஆமாம். மேற்படி பொன்னுசாமி கவுண்டர் 5, 6 வாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தி வைத்துள்ளதாக நாங்கள் சொல்லி உள்ளதை பொறுத்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சின்னா கவுண்டர் என்பவருக்கு பழனிச்சாமி கவுண்டர், நாச்சிமுத்து கவுண்டர், கருப்பணகவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான்.

4. பழனிச்சாமி கவுண்டர் என்பவரின் மகன் பெயர் பொன்னுசாமி கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி பொன்னுசாமி கவுண்டருக்கு

பிரதிவாதி மயில்சாமி என்பவரும் லீலாவதி என்பவரும் வாரிசுகள் என்றால் சரிதான். நாச்சிமுத்து கவுண்டர் என்பவருக்கு சுப்பராயன் என்ற ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். மேற்படியாரின் வாரிசுகளை தான் இந்த வழக்கில் 8 முதல் 11 வாதிகளாக சேர்த்து உள்ளோம் என்றால் சரிதான்.

5. தாவா சொத்துக்களை பொறுத்து 05.06.1919 தேதியில் பிரதிவாதியின் தாத்தாவான சின்னா கவுண்டர் என்கிற சின்னப்ப கவுண்டர். சுப்பராய கவுண்டரின் மகன்களான பழனிச்சாமி கவுண்டர் மற்றும் நாச்சிமுத்து கவுண்டர் ஆகியோர்கள் சேர்ந்து பாகக்கறார் செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். சின்னப்ப கவுண்டர் என்கிற சின்னா கவுண்டரின் மகன்களான பழனிச்சாமி கவுண்டர் கருப்பன கவுண்டர் மற்றும் நாச்சாப்பகவுண்டரின் மகனான சுப்பராயன் என்கிற சுப்பிரமணி ஆகிய மூவரும் 02.03.1959 இல் பாகம் செய்து கொண்டார்கள் ஆனால் அது தவறான பாகப்பிரிவினை.

6. மேற்படி பாகப்பிரிவினை செய்து கொண்ட காலத்திலேயே அது சம்பந்தமாக எனக்கும், என் தகப்பனாருக்கும் அது குறித்து தெரியும் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்து கொண்ட விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் இந்த வழக்கு சம்பந்தமாக மூன்று வருடங்களுக்கு முன்பு ஆவணங்கள் எடுக்கும் போது தான் அந்த விவரம் எனக்கு தெரியும். பாகம் செய்து கொண்ட விபரம் எங்களுக்கு எந்த தேதியில் தெரிய வந்தது என்பதை பொறுத்து எங்கள் வழக்குரையில் சொல்லி உள்ளோமா என்றால் இல்லை. 2 3 02.03.1959 தேதி பாகப்பிரிவினையில் பழனிச்சாமி கவுண்டர், கருப்பண்ண கவுண்டர் மற்றும் சுப்பராயன் என்கிற சுப்பிரமணி

ஆகியோர்களுக்கு முறையே ஏ முதல் சி அட்டவணை சொத்துக்கள் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. அந்த பாகப்பிரிவினையில் கருப்பன கவுண்டர் என்பவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை பிரதிவாதியின் தாத்தா பழனிசாமி கவுண்டருக்கு 20.04.1964 தேதியில் கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் ஆமாம். 02.03.1959 மற்றும் 20.04.1964 ஆவணங்களில் சொத்துக்கள் பொது காலியிடமாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாவா காலையில் உள்ள சொத்துக்களை பொறுத்து அவரது சகோதரி லீலாவதி என்பவரிடமிருந்து கடந்த 06.12.2019 தேதியில் ஒரு பாக பாக்கிய விடுதலை ஆவணம் எழுதி பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

8. தாவா 1வது அயிட்ட சொத்தின் ரீ.ச.எண். 579/6 மேப்படி ரீ.ச.எண். 579/6 பூமியின் மொத்த விஸ்தீரணம் குறித்து சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். நான் அதை வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ரீ.ச.எண். 579/6 காலையில் 3 சென்ட் விஸ்தீரணம் உள்ள பூமியானது 02.03.1959 தேதியிட்ட பாகப்பிரிவினையில் ஏ அட்டவணை சொத்தாக பிரதிவாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அதை தவறாக பாகம் ஒதுக்கி கொண்டுள்ளார்கள் அது பொது சொத்து. மேற்படி 3 சென்ட் பூமியின் தென்புறத்தில் தான் 2 சென்ட் இடத்தில் கோவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் உள்ள இடத்திலும் பிரதிவாதிக்கு பாக்கியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9. தாவா 1வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணத்தை வழக்குரையில் குறிப்பிட்டால் எனது வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்ற காரணத்தினால் அதை நான் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் ரீ.ச.எண். 579/6 பூமியில் உள்ள பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் 3 சென்ட் பூமியையும் சேர்த்து கோவில் கட்ட முயற்சி செய்கிறோம் என்று சொன்னால் சரியல்ல தாவா இரண்டாவது அயிட்ட சொத்தின் ரீ.ச.எண்.579/4, 5 என்றால் சரிதான்.ரீ.ச.எண்.579/4 பூமியின் விஸ்தீரணம் 2-1/2 சென்ட் என்றால் சரிதான்.

10. மேற்படி 2-1/2 சென்ட் பூமி ஆனது 02.03.1959 பாகப்பிரிவினையில் கருப்பண்ண கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு கருப்பண கவுண்டர் பிரதிவாதியின் தாத்தா பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். கற்பனை கவுண்டர் அவர் பாகத்தை மட்டும் தான் கிரயம் கொடுத்தார் பொது இடம் பொது இடமாகத் தான் தற்போது வரை உள்ளது. ரீ.ச.எண்.579/4 பூமியை பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் தவறாக ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார்.

11. ரீ.ச.எண்.579/5 பூமியானது 02.03.1959 பாகப்பிரிவினையில் பாகம் சுப்பராய கவுண்டருக்கு பாகம் ஒதுக்கப்பட்டு அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது மனைவி பழனியம்மாள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அவர்கள் தவறாக ஆக்கிரமிப்பு செய்து பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட பட்டாவை பொறுத்து நான் இதுவரை வருவாய் துறையில் ஆடசேபணை எதுவும் செய்யவில்லை

என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை பெறுவதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

12. தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொருத்த பட்டாவில் எனது பெயர் இடம் பெறவில்லை என்றால் சரிதான். தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொருத்த பட்டாவில் எங்கள் பெயரை சேர்த்த நாங்கள் இதுவரை எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான் அது விவரம் தெரியவந்தவுடன் இந்த வழக்கை தாக்கல் செய்து விட்டோம் தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பட்டா பல ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றும் அந்த விவரங்கள் குறித்து எங்களுக்கு நன்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக வேண்டி காலம் கடந்து பட்டா வழங்கப்பட்ட விபரம் தற்போது தான் தெரியவந்தது என்று வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.21 18:56:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்